DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 292/2024

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | சீனிவாசன் |
| Father / Husband Name | கன்னியப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24.**06.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மாமண்டூர் கிராமத்தில் வசித்து மட்டன் கடையில் வேலை செய்து வருகிறேன். சாட்சி செந்தில் குமாரை தெரியும். அவர் தற்போது இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 3 கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆகவும் மற்றும் கைப்பற்றுதல் மகசர்( எண்ணிக்கை 3) உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 3 முதல் அசாஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் படாளம் காவல் நிலையத்திற்கு சென்றேன். போலிசார் கையொப்பம் இட சொன்னதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 31.01.2014 ம் தேதி நானும் செந்தில் குமாரும் மேல்மருவத்தூர் கோவிலுக்கு சென்றுவிட்டு மேல்மருவத்தூர் பேருந்து நிருத்தத்தில் நின்றிருந்தோமா என்றால் இல்லை. அப்போது எங்கள் அருகே நின்றிருந்த ஒரு நபரை படாளம் போலிசார் கைது செய்து விசாரித்த போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் இல்லை. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த இரும்பு கம்பியுடன் கூடிய லாரியை எங்கள் முன்னிலையில் ஆஜர் செய்ததை போலிசார் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி விவரங்களை போலிசார் விசாரிக்கும் போது

கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**